# தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

பணியமைப்பு - பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கீழ் இயங்கிவரும் அய்யாறு வடிநிலக் கோட்டம் என்ற பெயரை, மருதையாறு வடிநிலக் கோட்டம் என பெயர் மாற்றம் செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி ( என்-2)த்துறை

அரசு ஆணை ( நிலை ) எண்.124
நாள் 17.05.2005

படிக்கவும்

1) அரசாணை நிலை எண்.46, பொதுப்பணித்துறை, நாள் 19.01.1996

2) அரசாணை நிலை எண்.371, பொதுப்பணித்துறை, நாள் 26.06.1997

3) முதன்மை தலைமைப் பொறியாளர், கடித எண். உசெபொ/தொநு-1/உபொ1/64886/98 நாள் 23.02.2005

0-0-0

ஆணை

மேலே படிக்கப்பட்ட 1 மற்றும் 2ல் உள்ள அரசாணைகள் அரியலூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்த அரியலூர் கோட்டத்தினை 01.2.1996 முதல் அய்யாறு வடிநிலக் கோட்டம், அரியலூர் என பெயர் மாற்றம் செய்து இயங்கி வருகிறது.

2. மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்கள் தனது கடிதத்தில், திருச்சி மண்டலத்தின் கீழ் அய்யாறு வடிநிலக் கோட்டம் அரியலூர் மற்றும் அரியாறு வடிநிலக் கோட்டம், திருச்சி என இரண்டு கோட்டங்கள் கிட்டத் தட்ட ஒரே பெயரில் இயங்கி வருவதால் குழப்பம் ஏற்படுகிறது என்றும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அரியலூர் அய்யாறு வடிநிலக் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் மருதையாறு என்ற பிரதான ஆறு ஓடுகிறது. ஆனால் அய்யாறு என்ற பிரதான ஆறு திருச்சி அரியாறு வடிநிலக் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் ஓடுவதாலும் தற்பொழுதுள்ள அய்யாறு வடிநிலக் கோட்டம் என்ற பெயரினை மருதையாறு வடிநிலக் கோட்டம் அரியலூர் என பெயர் மாற்றம் செய்தும் அதன் கீழ் இயங்கும் மூன்று அய்யாறு உபகோட்டங்களின் பெயரையும் மருதையாறு உபகோட்டம் எனவும், பெயர் மாற்றம் செய்து ஆணையிடுமாறு கேட்டுள்ளார்.

3. முதன்மை தலைமைப் பொறியாளரின் கருத்துருவை அரசு கவனத்துடன் பரிசீலித்த பின் அரியலூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும்

அய்யாறு வடிநிலக் கோட்டத்தினை தலைமை இடங்கள் மாற்றமின்றி கூடுதல் செலவினம் ஏற்படாவண்ணம் மருதையாறு வடிநிலக் கோட்டம் எனவும், அக்கோட்டத்தின் கீழ் இயங்கிவரும் உப கோட்டங்களை மருதையாறு வடிநில உபகோட்டங்கள் என பெயர் மாற்றம் செய்து அரசு ஆணை வெளியிடுகிறது. மேற்கண்ட ஆணை உடனடியாக செயல்பாட்டுக்கு வருகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 339 /ஞிஷி(கூஷிழிறி)/2005 நாள் 10.05.2005 இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்

அரசு செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை, சென்னை - 5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி-20
மாவட்ட ஆட்சித் தலைவர், பெரம்பலூர்
மாவட்ட கருவூல அலுவலர், பெரம்பலூர்
கருவூலம் மற்றும் கணக்கு இயக்குநர், சென்னை
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், பொதுப்பணித்துறை
அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதி ( பொப - 11) த்துறை, சென்னை -9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்